தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 4, சனிக்கிழமை

பங்குனி 21, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு-2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து".

பொறுத்திருக்கும் காலத்தில் கொக்கு போல் அமைதியாக இருக்க வேண்டும். காலம் வாய்த்தபோது அதன் குத்துப்போல் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு அளிக்கும் திட்டம்.

282—(* வினா எண் 6607) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு அளிக்கும் திட்டம் அமுல்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பேர்கள் இதனால் பயன்பெறுகிறார்கள் ? எந்த அடிப்படையில் எத்தனை சதவீதம் அளிக்கப்படுகிறது என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 30—12—1983 ஆம் நாள் அன்று மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு

பெறுவது பற்றிய இத்திட்டம் 5—3—1986 அன்று நடந்த மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. 6—8—1986 அன்று திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்சொன்ன பொருள் குழுவினால் கருத்தில் கொள்ளப்பட்டு, அடுத்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்க முடிவு செய்யப் பட்டிருக்கிறது. நான் ஆம் என்று கூறியது, ஏற்கனவே Shop Floor Plant Level என்கின்ற வகையில் மத்திய நிறுவனம், மாநில நிறுவனம், தனியார் நிறுவனம், கூட்டுறவு நிறுவனம் ஆகிய 94 நிறுவனங்களில் இது ஏற்கனவே அமுலில் இருந்து வருகிறது என்பதைத்தான்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை தொழிலாளர்கள் பணியாற்றினால் அந்தத் தொழிற்சாலையில் E.S.I. மற்றும் P.F. வசதிகள் செய்யப் படுகின்றன? அப்படி இந்த வசதிகளைச் செய்யாத தொழிற் சாலைகளுடைய உரிமத்தையும் மின்சார வசதியையும் அரசு ரத்து செய்வதற்கு முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதுகுறித்து தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும். நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறுவது என்பதைப் பொறுத்தவரையில் 500 அல்லது அதற்கு அதிகமான தொழிலா ளர்கள் வேலைக்கு அமர்த்தப்படும் நிறுவனங்களில் இது செயல் படுத்தப்படுகிறது.

திரு. ஆர். செங்காளியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர்கள் பங்கு பெறுவது என்பது அரசாங்கத் துறையிலே இருக்கக்கூடிய நிறுவனத்திற்கு மாத்திரமா அல்லது தனியார் துறையிலே இருக்கக்கூடிய நிறுவனத்திற்கும் அமுல் படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களுக்கும் உண்டு.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மத்திய அரசாங்கம் இந்த மாதிரி தொழிலாளர்கள் மானேஜ்மென்டில் பங்குபெறுவது என்ற திட்டத்தை அமுலாக் குவது என்ற முடிவுக்கு வந்து ரொம்ப மெதுவாக அந்தக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கு என்ன காரணம்?

1987 ஏப்ரல் 4]

உண்மையாகவே, இந்த ஜாயின்ட் மானெஜ்மென்ட் என்கிற மாதிரி, அந்த நிர்வாகத்திலே பங்குபெறும்போது அந்தத் தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலைகளுடைய நிர்வாகத்திலே, அதனுடைய நிதிநிலைமை போன்ற இப்படிப்பட்ட விஷயங்களில், அவர்கள் கேட்பதற்கோ, தெரிந்துகொள்வதற்கோ, அதைப் பற்றி பரிசீலிப்பதற்கோ இடம் இல்லாத நிலைமை இருந்து வருவதால் தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் இதில் உற்சாகமாக இல்லையென்று சொல்லப்படுவது உண்மையா? அப்படியானால், அப்பொழுது நடந்த விவாதத்தில் ஏதாவது வழி செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் கூறுகின்ற கருத்து உண்மை. தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு பெறும்போது தொழிலைப் பற்றியும், நிர்வாகம் பற்றியும், தொழில் இன்றைய பொருளாதார நிலையில் எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பற்றியும் தொழிலாளர்கள் தெரிந்துகொள்வார்களானால் தொழில் தகராறுகளுக்குக் கூட அதிக இடம் இருக்காது. ஆகவே, எவ்வளவுக்கு எவ்வளவு விரைவாக நாம் இதை அமுல்படுத்துகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது என்பதுதான் அரசினுடைய தெளிவான கொள்கை. மத்திய அரசு 1983 ஆம் ஆண்டு ஒரு திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். அதுபற்றி நம்முடைய மாநில தொழிலாளர் நல ஆலோசனைக் குழு கூடி, ஏற்கனவே பேசி, அதை அடுத்த கூட்டத்தில் மேலும் விவாதிப்பதற்காக ஒத்திப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கூட்டத்தில் கூடி பேசி என்ன முடிவெடுக்கிறோமோ அந்த முடிவுக்கேற்ப அமுல் படுத்துவோம்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளிலே நிர்வாகத்தில் பங்குபெறுவது தொழிலாளர்களுடைய உரிமை என்ற அடிப்படையிலே அரசு ஒப்புக்கொண்டிருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியதாகும். ஆனால் இந்த நல்ல கொள்கை, நடைமுறையில், நல்லமுறையில் நிறைவேறுவதற்குத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து, இந்தத் திட்டம்

நடைமுறையில் நிறைவேறாமல் இருக்கிற பாதகங்களை விவாதிப்பதன் மூலம் மேலும் அத்திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றுவதற்குத் தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தைதான் ஏற்கனவே நடைபெற்று மீண்டும் நடைபெறுவதாக உள்ளது. State Labour Advisory Board என்பது அதுதான். எல்லாத் தலைவர்களும் அதிலே இருக்கிறார்கள்.

வேலை இல்லாதவர்களுக்கு தனியார் நிறுவனத்தில் வேலை தருவது.

283—(*வினா எண். 6803) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலை இல்லாதவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாங்கித் தருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்கள் அரசாங்க அலுவலில் இருந்து ரிடையர் ஆனவர்களாக நியமிக்கப்படுகிறார்கள். தனியார் நிறுவனங்களிலே குறிப்பிட்ட வயது வரம்பு வரையில்தான்—எப்படி அரசு வேலையில் குறிப்பிட்ட வயது வரம்பு வரையில் வேலை பார்க்கலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போன்று—வேலை பார்க்கலாம் என்ற அடிப்படையில் அரசு செயல்படுத்துமா? அது மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்களில் சில முதலாளிகள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அந்தச் சமுதாயத்தைச்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS